எனது இல.: S-1/25/PSC/2016(II) தொகுதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
306/72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

2016 நவம்பர் 10

**சகல பிரிவுத் தலைவர்களிற்கும்.**

**கணக்காய்வு பரீட்சகர் சேவையின் II ஆம் தரத்தில் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்களை கணக்காய்வு பரீட்சகர் சேவையின் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்துதல்.**

---

கணக்காய்வு பரீட்சகர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பிலுள்ள கணக்காய்வு பரீட்சகர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களை கணக்காய்வு பரீட்சகர் சேவையின் தரம் I இற்கு பதவியுயர்த்துதல் தொடர்பான 6(1) ஆம் பந்தியினைத் திருத்துவதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

02. அந்த திருத்தத்தின் பிரகாரம் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கணக்காய்வு பரீட்சகர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள், கணக்காய்வு பரீட்சகர் சேவையின் தரம் I இற்கு பதவியுயர்த்தப்படுவதற்காக விண்ணப்பிக்க முடியும்.

I. நியமனம் நிரந்தமாக்கப்பட்டிருத்தல்

II. சேவையின் தரம் II இல் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் பத்து (10) சம்பள ஏற்றங்களை ஈட்டியிருத்தல்.

III. அங்கீகரித்த செயலாற்றல் மதிப்பீட்டு நடைமுறைக்கமைய பதவியுயர்வுத் திகதிக்கு முன்னரான பத்து (10) ஆண்டு காலத்தினுள் திருப்திகரமான நிலை அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றலை காண்பித்திருத்தல்.

IV. பதவியுயர்வுத் திகதிக்கு முன்னைய ஐந்து (05) ஆண்டு காலத்தினுள் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

V. குறித்த நிலைக்குரிய ஏனைய அரச கரும மொழியில் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல்.

VI. குறித்த வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் உரிய திகதியில் சித்தியடைந்திருத்தல்.

3. அதற்கமைய, உங்களது மேற்பார்வையின் கீழ் பணியாற்றுகின்ற கணக்காய்வு பரீட்சகர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களை அறிவுறுத்துமாறும், தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்களிற்கு பின்னிணைப்பு 01 இல் காணப்படுகின்ற மாதிரி படிவத்தினை நிரப்பி உங்களுடாக எனக்கு அனுப்பிவைப்பதற்கு ஆலோசனை வழங்குமாறும் தயவுடன் அறிவிக்கின்றேன்.

ஒப்பம்: எம்.எஸ். கபுகொடுவ
பணிப்பாளர் (நிர்வாகம்)
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பதிலாக